TNDG010058942019

# முதன்மை மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

**முன்னிலை : திரு.V. பத்மநாபன், M.A., M.L., D.H.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி , திண்டுக்கல்**

2026–ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 18–ஆம் நாள்
செவ்வாய்கிழமை

**அசல் வழக்கு எண்.279/2019**

1. ஜனார்த்தனன்
2. நாகஜோதி .... வாதிகள்.

–எதிர்–

1. ராஜகோபால்
2. வேல்ராஜ்
3. நாகராஜ்
4. முத்துகிருஷ்ணன்
5. புஷ்பம்
6. இந்திராணி
7. கோவிந்தராஜன்
8. பத்மினி
9. ஆல்பர்ட் கிறஸ்துதாஸ்
10. சீனிவாசன்
11. காளிமுத்து
12. வெள்ளைச்சாமி
13. லட்சுமி
14. முத்துலட்சுமி

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:11:45 +0530

15.பெரியசாமி
16.ராமகிருஷ்ணன்
17. அன்னகாமு
18. செல்வராஜ்
19.முருகேசன்

.... பிரதிவாதிகள்.

இவ்வழக்கில் வாதிகளுக்காக வழக்கறிஞர் திரு.டி.முத்தமிழ்செல்வன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 பிரதிவாதி–களுக்காக வழக்கறிஞர் திருவாளர் ராஜேந்திரன் அவர்கள் ஆஜராகியும், 3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் கே.பி.நடராஜன், என்.டி.ஆர்.விஜயகுமார் மற்றும் எம்.பாண்டியராஜன் ஆகியோர்கள் ஆஜராகியும், 18ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.எம்.லோகநாதன் அவர்கள் ஆஜராகியும், 19ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் எம்.வசந்தராஜா, ஐ.வேல்முருகன் மற்றும் எஸ்.கீதா ஆகியோர்கள் ஆஜராகியும், 4 முதல் 8, 9 முதல் 17 வரையான பிரதிவாதிகள் அழைத்தும ஆஜராகாத நிலையில் தோன்றாத் தரப்பினராக பாவித்தும், இருதரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலித்தும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இறுதியாக 04.08.2026 அன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:11:55 +0530

வரப்பெற்று இதுநாள்வரை பரிசீலனையில் இருந்து, இந்நீதிமன்றத்தில் பின்வருமாறு வழங்கும்....

**தீர்ப்புரை**

(அ) தாவா சொத்துக்களில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 30 சென்ட் நிலத்தினை பிரதிவாதிகள் நயமிடர் பார்த்து பிரித்து தனித்த சுவாதீனம் கொடுக்கும்படி முதல்நிலை தீர்ப்பாணை வழங்க வேண்டியும்,

(ஆ) அதன் பின்னிட்டு நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து, தாவா சொத்துக்களை பிரித்துத்தர ஏதுவாக இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க–வேண்டியும்

(இ) இவ்வழக்கின் செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி வாதிகள் தரப்பில் இவ்வழக்கு தாக்கல்.

2. **வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:**

(அ) தாவா சொத்தும் வேறு சில சொத்துக்களும் ஆதியில் கந்தசாமிநாயுடு என்பவருக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்டிருந்தன. அதை அவர் அனுபவித்து வந்து, எவ்வித ஏற்பாடுகளும் செய்து வைக்காமல் வெகு ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டார்.

PADMANABAN VENKATASAMY Digitally signed by PADMANABAN VENKATASAMY Date: 2026.08.18 17:12:08 +0530

அவருக்கு பின்னர், அவரது இரு மனைவிகளான சின்னம்மாள் மற்றும் கொண்டம்மாள் ஆகியோர் தன் மைனர் மக்கள்களுடன் சேர்ந்து அனுபவித்து வந்து, 25.01.1950ம் தேதி கந்தசாமிநாயுடு மகன் நாகமநாயுடு என்பவருக்கு கிரையம் செய்து, சுவாதீனத்தையும் கொடுத்து-விட்டனர். மேற்படி நாகமநாயுடு, தன் கைவசம் வைத்து அனுபவித்து வந்து, 10.5.1950ம் தேதி சுப்பாநாயுடு மகன் ராமசாமிநாயுடு (வாதிகளின் தந்தை) என்பவருக்கு சரியான பிரதிபிரயோஜனத்திற்கு கிரையம் செய்து சுவாதீனமும் ஒப்படைத்துவிட்டார். கிரையம் பெற்ற ராமசாமிநாயுடு தன் பெயரில் பட்டா ஏற்படுத்தி நிராட்சேபணையாய் அனுபவித்து வந்தார். பின்னிட்டு, 22.5.1950ம் தேதி மேற்படி ராமசாமிநாயுடு, தான் கிரையம் பெற்ற சொத்துக்களில் சர்வே எண்.574/2ல் கிரையம் பெற்ற செண்ட் 86-ல் ஜாயிண்ட் 56 செண்ட் நிலத்தையும், மற்ற நிலத்தினையும் பெருமாள் மாதாரி என்பவருக்கு கிரையம் செய்திருக்கிறார். ஆனால் நான்குமால்கள் குறிப்பிடாமலும், எந்த பகுதியில் சொத்து உள்ளது என்று குறிப்பிடாமலும் கிரையம் செய்ததால் அவர்கள் இருவரும் கூட்டு உரிமையாளர்கள் என்ற முறையில் கூட்டாகவே வைத்து அனுபவித்து வந்தனர். சர்வே

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:12:18 +0530

எண்.574/2ல் இருந்த பாக்கி செண்ட் 30–யும் பெருமாள்மாதாரி என்பவருடன் சேர்ந்து அனுபவித்து வந்தார்.

(ஆ) பெருமாள் மாதாரி, ராமசாமிநாயுடு என்பவருடன் கூட்டு உரிமையாளர் என்ற முறையில் அனுபவித்து வந்து அவரது காலத்திற்கு பின்னிட்டு அவரது வாரிசுகளான மனைவி மற்றும் மக்கள் வெவ்வேறு தேதிகளில் தனித்தனி ஆவணங்கள் மூலம், நாகமநாயுடு மகன் கந்தசாமிநாயுடு என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளனர். மேற்படி கந்தசமிநாயுடுவும், ராமசாமிநாயுடு என்பவரும் கூட்டு உரிமையாளர் என்ற முறையில் ஒன்றாக தங்கள் கைவசம் வைத்து அனுபவித்து வந்ததில், ராமசாமிநாயுடு தனது வயோதிகத்தின் காரணமாக கடந்த 2.2.2000ம் தேதி தாவா சொத்தினை பொறுத்து எவ்வித ஆவணமும் ஏற்படுத்திவைக்காமல் இந்த வாதிகளையும், அவரது மனைவி வீரம்மாள் என்பவரையும் வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். அந்த வீரம்மாளும் கடந்த 14.8.2009ம்தேதி இந்த வாதிகளை மட்டும் வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். கந்தசாமி–நாயுடு இறந்த பிறகு அவரது வாரிசுகளான இந்த 1 முதல் 3 பிரதிவாதிகள், மேற்படி ராமசாமிநயுடுவின் மக்களான வாதிகளுடன் சேர்ந்து கூட்டு

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:12:29 +0530

உரிமையாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் என்ற முறையில் அனுபவித்து வந்தனர்.

(இ) வாதிகள் தங்களுக்கு தகப்பனார் மூலம் பாத்தியப்பட்ட ஜாயிண்ட் 30 சென்டை பிரித்து தனித்த சுவாதீனம் தருமாறு 1 முதல் 3 பிரதிவாதிகளும் துயர்ந்து வந்ததில், அவர்களும் பிரித்து தருவதாக சொல்லி காலம் கடத்தி வந்ததால், 1ம் வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது 2018 மார்ச் மாதத்தில் திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர்களிடத்தில் புகார் கொடுத்து 23.4.2018ம் தேதி விசாரணை மேற்கொண்டதில், இந்த 1 முதல் 3 பிரதிவாதிகள் நீதிமன்றம் மூலம் சொத்தினை பிரித்துக்கொள்ளுமாரு குறிப்பிட்டு, எழுதிக்கொடுத்துவிட்டனர். அந்த விசாரணையில் 1 முதல் 3 பிரதிவாதிகள், 4 முதல் 7 பிரதிவாதிகள், தாவா சொத்தின் சர்வே எண்.574/2ல் செண்ட் 86ல் ஜாயிண்ட் செண்ட் 30ஐ தங்களுக்கும், அவர்களது தாயார் லெட்சுமியம்மாள் ஆகியோர்களுக்கும், அவர்களின் தந்தை மற்றும் கணவரான பெத்துநாயுடு என்பவருக்கும், அவரது தகப்பனர் வழியில் பூர்வீக பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு, 29.01.1985ம் தேதி பதிவு செய்யப்பட்ட ஜெனரல் பவர் பத்திரம் ஒன்றை பெத்துநாயுடுவின் உடன் பிறந்த தம்பியான சுப்பாநாயுடு என்பவர்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:12:39 +0530

பெயருக்கு எழுதி பதிவு செய்து கொடுத்திருப்பதாகவும் அந்த பவர் பத்திரத்தினை ஆஸ்பதமாக கொண்டு, சுப்பாநாயுடுவும், 1 முதல் 3 பிரதிவாதிகளின் தந்தையான கந்தசாமிநாயுடுவும் சேர்ந்து, தாவா சொத்துக்களை மனையடிகளாக பிரித்து 8 முதல் 19 பிரதிவாதிகளுக்கு 8.2.1985, 11.2.1985 மற்றும் 13.2.1985 தேதிகளில் தனித்தனி ஆவணங்கள் மூலம் கிரையம் செய்து கொடுத்திருக்கும் விபரம் வாதிகளுக்கு தெரிய வந்தது.

(ஈ) மேற்சொன்ன ஜெனரல் பவர் பத்திரம் ஏற்படுத்திய காலத்தில் தாவா சொத்தில் பெத்துநாயுடு வாரிசுகளுக்கு எந்தவித பாத்தியமோ, உரிமையோ, அனுபவமோ இருந்ததில்லை. அந்த சொத்து அவர்களுக்கு பூர்வீகவழியில் பாத்தியப்பட்டதுமில்லை. பொய்யான ஒரு பவர் பத்திரத்தினை உற்பத்தி செய்துள்ளனர். அது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. அது வாதிகளை கட்டுப்படுத்தாது. அந்த பவர் மற்றும் கிரைய ஆவணங்களும், வாதிகளுக்குரிய பங்கான 30 செண்ட் நிலத்தினை பொறுத்து மட்டும் செல்லத்தக்கவையல்ல.

(உ) 1ம் வாதி, திண்டுக்கல் மாவட்ட பத்திரப்பதிவு பதிவாளர் அவர்களிடத்திலும் மனு செய்து, பவர் மற்றும் கிரைய ஆவணங்களை

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:12:49 +0530

இரத்து செய்து கொடுக்குமாறு கேட்டிருக்கிறார். அந்த மனுவிலும் விசாரணை நடபெற்று வருகிறது. இந்த வாதிகளின் தந்தையான ராமசாமிநாயுடு தான் கிரையம் பெற்ற நிலத்தில், பெருமாள் மாதாரிக்கு கிரையம் செய்து கொடுத்த 56 செண்ட் நிலம்போக பாக்கி 30 செண்ட் நிலத்தினை அவரே கூட்டாக மற்ற கிரையதாரர்களுடன் சேர்ந்து அனுபவித்து வந்தார். அந்த 30 செண்ட் நிலத்தினைபொறுத்து எவ்வித ஆவணமும் எழுதிவைக்கவில்லை. இந்த 4 முதல் 7 பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு எவ்வித ஆவணத்தையும் எழுதிக்கொடுக்க–வுமில்லை. பொய்யான பவர் ஆவணத்தை உற்பத்தி செய்து, இந்த 8 முதல் 19 பிரதிவாதிகளுக்கு கிரையம் செய்திருக்கிறார். இன்றுவரை கூட்டு உரிமையாளர்கள் என்ற முறையில் வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கூட்டாக வைத்து அனுபவித்து வருகின்றனர். அதனால் தாவா சொத்தில் வாதிகளுக்கு பாத்திப்பட்ட 30 செண்ட் நிலத்தினை இந்த பிரதிவாதிகள், |வாதிகளுக்கு பிரித்துக்கொடுக்க கடமைப்பட்டவர்களாவார்கள். எனவே, வழக்கு.

**3. 1, 2 பிரதிவாதிகளால் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

(அ) பிராது சங்கதிகள் தவறானது. வாதிகளோ, அவர்களது

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:12:58 +0530

தந்தையோ, 1 முதல் 3 பிரதிவாதிகளுடனோ அல்லது பிராதில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களுடனோ ஒருபோதும் கூட்டு பாத்தியத்தில் இருந்ததில்லை. வாதிகள் எந்த விதத்திலும் இணை உரிமையாளர்கள் அல்ல. வழக்குச் சொத்தானது, பிராதில் விவரிக்–கப்பட்டுள்ளபடி ஒரு காலி வறண்ட புஞ்சா அல்ல. மாறாக திண்டுக்கல் நகரின் விரிவாக்கமான ஈ.பி. காலனியின் ஒரு பகுதி. அதில் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக குடியிருப்பு வீடுகள் உள்ளன. இந்தப் பிரதிவாதிகள் எந்தக் காலத்திலும் வழக்குச் சொத்தை அனுபவிக்கவில்லை. இந்தப் பிரதிவாதிகள் எந்த வகையிலும் வழக்குச் சொத்துடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை. இந்த ஆவணங்கள் வழக்குச் சொத்துடன் முற்றிலும் தொடர்பற்றவை.

(ஆ) இந்த வழக்கு காலவரையறையால் தடைபட்டுள்ளது மற்றும் முறையான நீதிமன்றக் கட்டணம் இல்லாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. அவசியமான தரப்பினர் தவறாகச் சேர்க்கப்பட்டுள்ளலும், சேர்க்கப்படாததாலும் இவ்வழக்கு செல்லாததாகிறது. இந்த பிரதிவாதிகளின் தந்தையான கந்தசாமி என்பவர், வழக்கு சர்வே எண்ணில் தெற்குப் பக்கத்தில் 56 சென்ட்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:13:08 +0530

என்ற குறிப்பிட்ட பகுதியையும், அருகிலுள்ள சர்வே எண்கள் 575/1–ல் வடக்குப் பக்கத்தில் 46 சென்ட் பகுதியையும், 575/3–ல் 50 சென்ட் பகுதியையும் வாங்கி தன் வசம் வைத்திருந்தார். அவர் ஒருபோதும் முழு சர்வே எண்ணை அனுபவிக்கவில்லை. மீதமுள்ள, இந்த சர்வே எண்களின் மற்ற பகுதிகள், பிரதிவாதிகள் 4 முதல் 6 வரையிலானவர்களுக்கு உரிமையில் முன்னோர்களான சுப்பா நாயுடு மற்றும் லட்சுமி ஆகியோருக்குச் சொந்தமானவை.

(இ) கந்தசாமி குறிப்பிட்ட பகுதிகளை வாங்கியிருந்தபோதிலும், ஆவணத்தை எழுதியவர் முந்தைய பத்திரங்களை அப்படியே நகலெடுத்தார். கந்தசாமி தனது சொத்தில் வீட்டு மனைகளுக்கான மனைப்பிரிவை அமைத்ததில், வீட்டு மனைகள் 7 முதல் 19 வரையிலான பிரதிவாதிகளுக்கு விற்கப்பட்டன. அவர்கள் அவற்றை பல்வேறு நபர்களுக்கு விற்றனர்; அந்த நபர்கள் மனைகளை வாங்கியவுடனேயே, அதாவது 1985 முதலே, கட்டுமானப் பணிகளைத் தொடங்கினர். மேற்கூறிய கந்தசாமியும் சுப்பா நாயுடுவும் தங்களுக்குரிய பங்கின்படி விற்பனைத் தொகையைப் பங்கிட்டுக் கொண்டனர்.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:13:17 +0530

(ஈ) வாதி தரப்பினர் உரிமை கோரும் மற்ற பங்கின் விற்பனைத் தொகையை கந்தசாமி பெறவில்லை. 1983 ஆம் ஆண்டு முதல் 1, 2 பிரதிவாதிகள் ஒவ்வொருவரும் தனித்தனியாக வாழ்ந்து வருகின்றனர். 1985–ல் அந்த நிலத்தின் தன்மையும் வகைப்பாடும் மனைகளாக மாற்றப்பட்டதிலிருந்து, அந்த நிலத்தின் தளவமைப்பு மற்றும் விற்பனை குறித்து ராமசாமிக்கும் வாதிக்கும் முழுமையாக தெரியும்.

(உ) நிலத்தின் அமைப்பு மற்றும் உரிமை மாற்றம் குறித்த முழு அறிவு இருந்தபோதிலும், தந்தையான ராமசாமி, உரிமை மாற்றம் செய்யப்பட்ட பிறகு, சட்டப்பூர்வ காலமான பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக உயிருடன் இருந்தும் அதை எதிர்த்து வழக்குத் தொடரவில்லை. அந்த நேரத்தில் வாதியினர் வளரிளம் பருவத்தினராக இருந்தபோதிலும், அவர்களும் அதை கேள்வி கேட்கவில்லை. அந்த ராமசாமி, வழக்குப் பொருளின் மீது தனக்கு ஏதேனும் உரிமை இருந்திருந்தால், அதைத் தானே கைவிட்டு, இழந்துவிட்டார் என்பது நிரூபிக்கப்பட்ட வழக்கு. அவர் தனது வாரிசுகளுக்கு எதையும் விட்டுச் செல்லவில்லை.

(ஊ) மாறாக, பிரதிவாதிகள் 7 முதல் 19 வரையிலானோர் நல்லெண்ணத்தின்பால் வாங்கியவர்களும், அவர்களுக்குப் பின் வந்த

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:13:27 +0530

வாங்குபவர்களும், ராமசாமி மற்றும் வாதியினரின் முழுமையான அறிவுக்கு அப்பாற்பட்டு, சட்டப்பூர்வமான கால அளவான 35 ஆண்டுகளுக்கும் மேலாக, வெளிப்படையாகவும் பகிரங்கமாகவும், தாவா சொத்தை தொடர்ச்சியாகவும் இடைநில்லாமல் பிரத்தியேகமான அனுபவத்திலும் இருந்து வந்துள்ளனர்.

(எ) இந்த வழக்கு காலவரையறைச் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. வெளிப்படையாகவே தாவா சொத்து 35 ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு நபர்களின் கைகளில் உள்ளதோடுமட்டுமின்றி, வழக்குச் சொத்தானது வாதிகளின் கைகளிலும், 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் கைகளிலும் இல்லை. கந்தசாமி மற்றும் சுப்பா நாயுடு செய்த விற்பனையை மனுதாரர்களால் புறக்கணிக்க முடியாது.

(ஏ) பிரதிவாதிகள் அந்தச் சொத்தை விற்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அவர்கள் வழக்குச் சொத்துடன் தொடர்பற்றவர்கள், சம்பந்தமற்றவர்கள். மேலும், வழக்கு நிலம் அவர்கள் கையில் இல்லை. எனவே, இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட–வேண்டும்.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:13:37 +0530

**4. <u>3 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

(அ) தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டத்தின் பிரிவு 37(2)ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கு ஏற்கத்தக்கதல்ல. அசல் பத்திரங்கள் மற்றும் துணை ஆவணங்கள் சமர்பிக்கப்படாத நிலையில், தங்கள் தந்தையுடையது எனக் கூறப்படும் விற்பனைப் பத்திரங்கள் உண்மையாகவே தந்தை ராமசாமியுடையவை என்பது ஒப்புக்கொள்ளப்படவில்லை. குறிப்பாக 1984 ம் ஆண்டிலேயே வறண்ட புஞ்சா நிலத்தின் தன்மை, வகைப்பாடு மற்றும் குணாதிசயம் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகளாக மாற்றப்பட்ட பிறகு அந்த வழக்குச் சொத்தானது பிரதிவாதிகள் 7 முதல் 19 வரையிலும், 1985 முதல் அவர்கள் வாங்கிய அடுத்தடுத்த நபர்களுக்கும், மேற்கூறிய ராமசாமி மற்றும் வாதிகளின் கண் முன்னாலேயே விற்கப்பட்ட நிலையில், வாதி தாவா பிராதில் கூறும் சங்கதிகள் ஏற்புடையதாக இல்லை. இந்த பிரதிவாதிகளுக்கும் வழக்கு சொத்திற்கும் எவ்விதமான சம்பந்தமும் இல்லை. வழக்கு சொத்துக்கள் இந்த 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளின் கையில் ஒருபோதும் இருந்ததில்லை. இந்த 1 முதல் 3 வரையிலான பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை நிவாரணம் கோருவதும், வழக்குச் சொத்தை

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:13:48 +0530

உண்மையில் உடைமையில் வைத்திருக்கும் 7 முதல் 19 வரையிலான பிரதிவாதிகளிடமிருந்து வாங்கியவர்களை வழக்கில் சேர்க்காமல் இருப்பதும் ஏற்புடையதாக இல்லை.

(ஆ) வழக்கு சொத்தானது கந்தசாமி தனது சுய கையகப்படுத்துதலின் மூலம் சர்வே எண்.574/2ல் தெற்குப் பக்கத்தில் 56 செண்ட், சர்வே எண்.575/1ல் வடக்குப் பக்கத்தில் 46 செண்ட் மற்றும் சர்வே எண்575/3ல் 50 செண்ட் என ஒரு குறிப்பிட்ட பகுதியை வைத்திருந்து அவருக்கு உரிமையான பகுதியை மட்டுமே விற்றார். மேற்கூறிய சர்வே எண்களின் மீதமுள்ள மற்ற பகுதி, சுப்பா நாயுடு மற்றும் லட்சுமி அம்மாள் ஆகியோரின் பரம்பரைச் சொத்தாக இருந்தது.

(இ) லட்சுமி அம்மாள் சுப்பா நாயுடுவுக்கு வழங்கிய அதிகாரப் பத்திரத்தில் எந்தக் குறைபாடும் இல்லை. அது குடும்ப உறுப்பினர்களுக்கு இடையேயான ஒரு உண்மையான பத்திரம். வழக்கு நிலத்தின் தன்மை, வகைப்பாடு மற்றும் இயல்பு ஆகியவை வறண்ட புஞ்சாவிலிருந்து வீட்டு மனைகளாக மாற்றப்பட்டன. வழக்கு நிலம் அமைந்துள்ள பகுதியின் நிரந்தரக் குடியிருப்பாளர்களான ராமசாமி மற்றும் வாதியின் கண் முன்னாலேயே மனைப்பிரிவு நடந்தது. அந்த

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:13:56 +0530

மனைப்பிரிவையும் அதைத் தொடர்ந்த விற்பனையையும் கவனிக்காமல் விடுவதற்குச் சிறிதும் வாய்ப்பில்லை. மனைப்பிரிவு மற்றும் விற்பனை குறித்து அவருக்குத் தெளிவான அறிவு இருந்தபோதிலும், ராமசாமி தனது 15 ஆண்டு கால அவகாசத்தில் அவர் அதை எதிர்த்து வழக்குத் தொடரவில்லை. அதுபோலவே, வாதி தரப்பினரும் காலவரையறைக்குள் வழக்குத் தொடரவில்லை. எனவே, 1985 ஆம் ஆண்டில் நடந்ததாக அறியப்பட்ட விற்பனைப் பரிமாற்றத்தை அந்த ராமசாமி எதிர்க்கவில்லை. வழக்குச் சொத்தின் மீதான தனது அனைத்து உரிமைகளையும் அவர் இழந்ததால் அவரது வாரிசுகளான வாதிகளுக்குப் வழக்குச் சொத்து வாரிசுரிமையாகக் கிடைக்கவில்லை.

(ஈ) மனை வாங்கியவர்களான 7 முதல் 19 வரையான பிரதிவாதிகள் மற்றும் அவர்களால் உரிமை மாற்றம் பெற்றவர்கள் வில்லங்கம் சரிபார்த்த பின்னர், ஒரு குறிப்பிட்ட தொகைக்கு மனைகளை வாங்கியுள்ளனர். அனைத்து மனைகளும் விற்கப்பட்டு, கந்தசாமியும் சுப்பா நாயுடுவும் விற்பனைத் தொகையை உரிய பங்கீட்டில் பகிர்ந்து கொண்டனர். இந்நிலையில், தனது தந்தையிடமிருந்து வழக்குச் சொத்தை வாரிசாகப் பெறாததாலும், எந்த வகையிலும் அந்தச் சொத்து கைகளில் இல்லாததாலும், வாதிகளுக்கு இந்த வழக்கைத்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:14:04 +0530

தாக்கல் செய்ய சட்டப்பூர்வ தகுதி இல்லை. இந்த வழக்கு காலாவதியாகிவிட்டது. கர்த்தா 1985 ஆம் ஆண்டிலேயே தனது உரிமையையும் அனைத்தையும் இழந்துவிட்டதால், இந்த வழக்கு காலவரையறைச் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. அந்தச் சொத்து தங்கள் கைகளில் இல்லாததாலும், அதனுடன் அவர்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லாததாலும், மேலும் அது 1985 ஆம் ஆண்டிலேயே குடும்பத்தினரால் பறிக்கப்பட்டுவிட்டதாலும், வாதிகளால் அந்தச் சொத்தின் மீது எந்த நிவாரணத்தையும் கோர முடியாது.

(உ) மனை வாங்கிய 7 முதல் 19 வரையான பிரதிவாதிகள் மற்றும் அவர்களின் உரிமை வாரிசுகளும், சட்டப்பூர்வ காலமான ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கும் மேலாக, அந்த இடத்தில் தொடர்ச்சியாக இடைவெளியின்றி, தடையின்றி அனுபவத்தில் இருந்து வருகின்றனர். இந்த வழக்கு காலவரையறைச் சட்டத்தால் தடை செய்யப்பட்டுள்ளது. வாதிகளுக்கு பாகப்பிரிவினை பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல.

(ஊ) வழக்கில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குமூலம் பொய்யானது மற்றும் ஏற்றுக்கொள்ள முடியாதது. வழக்கு நிலம் வாதிகளின் வசம் இல்லாததால், தமிழ்நாடு நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 37(2)–ன்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:14:14 +0530

**கீழ் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல. வாதிகளால் சொத்து மாற்றப் பத்திரங்களைப் புறக்கணிக்க முடியாது. எனவே இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.**

**5. 18 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:**

(அ) வாதிகளின் பிராதில் சொல்லப்பட்டிருக்கும் அனைத்து சங்கதிகளும் சுத்தப்பொய் ஆகும். அதனை வாதிகளே நிருபிக்கக் கடமைப்பட்டவர்கள் ஆவர். வாதிகளின் வழக்கு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. வாதிகளின் வழக்கை எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்ய வேண்டியது அவசியமாகவும் நியாயமாகவும் உள்ளது. வாதிகளும், அவரது முன்னோர்களும் சர்வே எண். 574/2 ல் கட்டுப்பட்ட 86 செண்ட் நிலத்தை அனுபவித்து வந்தனர் என்பதையும், சர்வே எண். 574/2 ல் கட்டுப்பட்ட 56 செண்ட் நிலத்தை பெருமாள் மாதாரி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்தபிறகு மீதமுள்ள 30 செண்ட் நிலத்தை இராமசாமி நாயுடு அனுபவித்து வந்தார் என்பதை தக்க வருவாய்த்துறை ஆவணங்கள் மூலம் நிருபிக்க வாதிகள் கடமைப்பட்டவர்கள் ஆவர். வாதிகளுக்கு வழக்குச் சொத்தான 30 செண்ட் நிலத்தில் யாதொரு உரிமையும்

PADMANABAN VENKATASAMY Digitally signed by PADMANABAN VENKATASAMY Date: 2026.08.18 17:14:24 +0530

இல்லாததால் பாகப்பிரிவினை கோர வாதிகளுக்கு யாதொரு உரிமையும் இல்லை. மேலும் சர்வே எண். 574/2ல் கட்டுப்பட்ட 86 செண்ட் நிலம் முழுவதும் பிளாட்டுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதால் அச்சொத்தில் யாதொரு பாகப்பிரிவினையும் கோர வாதிகளுக்கு உரிமை இல்லை. இந்த வழக்கு பிரதிவாதிகளிடம் இருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளின் கூட்டு சதியுடன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கு.

(ஆ) உண்மையில் திண்டுக்கல் தாலுகா, செட்டிநாயக்கன்பட்டி கிராமம் சர்வே எண்.574/2ல் கட்டுப்பட்ட 56 செண்ட் நிலத்தை இராமசாமி நாயுடு என்பவரிடம் இருந்து பெருமாள் மாதாரி என்பவர் கிரையம் பெற்றதில் ஷை பெருமாள் மாதாரி அச்சொத்தை தன் கைவசம் வைத்து அனுபவித்து வந்து அவரது இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுகள் மேற்படி நிலத்தை நாகமநாயுடு மகன் கந்தசாமி நாயுடு என்பவருக்கு 21.07.1973ம் தேதி பதிவு கிரைய ஆவண எண்.377/1973 ஆவணம் மூலமும், மற்றும் 07.05.1980ம் தேதியில் பெருமாள் மாதாரி வாரிசுகளிடம் பதிவு கிரைய ஆவண எண்.776/1980 மூலமும் கிரையம் செய்து கொடுத்து விட்டனர். சர்வே எண்.574/2ல் கட்டுப்பட்ட 30 செண்ட் நிலம் கொண்டல்சாமி நாயுடு மற்றும் அவரது மனைவி காவேரி

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:14:33 +0530

அம்மாள் ஆகியோருக்கும் 30.07.1934ம் தேதிய பதிவு கிரைய ஆவண எண்.2436/1934 மற்றும் 21.02.1933ம் தேதிய பதிவு கிரைய ஆவண எண்– 516/1933 ஆகிய கிரைய ஆவணங்கள் மூலம் பாத்தியப்பட்டிருந்ததில் ஷை நபர்கள் இருவரும் அச்சொத்தை அனுபவித்து வந்து அவர்கள் இருவரும் இறந்த பிறகு அவரது ஆண் வாரிசுகளான சுப்பா நாயுடு, பெத்து நாயுடு, ஆகியோர் அச்சொத்துக்களை அனுபவித்து வந்தனர். கொண்டல் நாயுடுவின் மகனான பெத்துநாயுடு தன் மனைவி லட்சுமி அம்மாள், மைனர் மகன் இராஜேந்திரன் மற்றும் மேஜர் மகன்கள் முத்துகிருஷ்ணன் மற்றும் கோவிந்தராஜ், மற்றும் மகள்கள் புஷ்பம் மற்றும் இந்திராணி ஆகியோரை வாரிசாக விட்டு விட்டு இறந்து விட்டார். எனவே சர்வே எண்–574/2ல் கட்டுப்பட்ட 30 செண்ட் நிலத்தினை அதன் உரிமையாளர்களான சுப்பாநாயுடு, தனக்காகவும் தன் மைனர் மக்களுக்கு கார்டியனாக இருந்தும், கொண்டல்நாயுடுவின் மருமகளும், பெத்து நாயுடுவின் மனைவியான லட்சுமி அம்மாள் தனக்காகவும், தன் மைனர் மகன் இராஜேந்திரன், ஆகியோருக்கு கார்டியனாக இருந்தும், மற்றும் பெத்து நாயுடுவின் மேஜர் மக்கள் கூட்டாக வைத்து அனுபவித்து வந்தனர்.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:14:43 +0530

(இ) பெத்து நாயுடுவின் வாரிசுகள் அனைவரும் 29.01.1985ம் தேதி சுப்பாநாயுடுவுக்கு எழுதிக் கொடுத்த பதிவு பொது அதிகார ஆவண எண்.9/1985 மூலம் சுப்பாநாயுடு சர்வே எண்.574/2ல் கட்டுப்பட்ட 30 செண்ட் நிலத்தினை அனுபவித்து வந்தார். அதன் பிறகு நாகமநாயுடு மகன் கந்தசாமி என்பவர் சர்வே எண்.574/2ல் கட்டுப்பட்ட 56 செண்ட் நிலத்தின் உரிமையாளர் என்ற முறையிலும், சர்வே எண்.574/2ல் கட்டுப்பட்ட 30 செண்ட் நிலத்தை சுப்பாநாயுடு தனக்காகவும், தனக்கு பொது அதிகாரம் கொடுத்த நபர்களுக்கு பவர் ஏஜெண்ட் என்ற முறையிலும், சர்வே எண்.574/2ல் கட்டுப்பட்ட 86 செண்ட் நிலம் முழுவதையும் அவர்கள் இருவரும் மனையடியாக பிரித்து விற்பனை செய்து வந்தனர்.

(ஈ) கடந்த 13.02.1985ம் தேதி கந்தசாமியும், சுப்பாநாயுடு தனக்காகவும், பவர் ஏஜெண்டாகவும் இருந்து சர்வே எண்.574/2ல் கட்டுப்பட்ட பிளாட் எண்.4 மனையிடத்தில் 2486.1/4 சதுரடி நிலத்தை இந்த பிரதிவாதிக்கு பதிவு ஆவண எண்.284/1985 மூலம் கிரையம் செய்து கொடுத்து விட்டனர். அக்கிரையப் பத்திரத்தில் கந்தசாமி நாயுடுவின் மகன்கள் கையெழுத்து செய்யாததால் 25.03.1985ம் தேதி

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:14:51 +0530

கந்தசாமி நாயுடுவின் மகன்களான இராஜகோபால் மற்றும் வேல்ராஜ் ஆகியோரிடம் பதிவு சம்மதப் பத்திரம் பெற்றுள்ளார்.

(உ) சர்வே எண். 574/2ல் கட்டுப்பட்ட 86 செண்ட் நிலத்தில் போடப்பட்டுள்ள பிளாட்டுகளை இந்தப் பிரதிவாதி கிரையம் பெற்றது போல பல்வேறு நபர்களும் பிளாட்டுகளாகக் கிரையம் பெற்றுள்ளனர். சொத்தை பிளாட்டுகளாகக் கிரையம் பெற்ற அனைத்து நபர்களும் சொத்தில் வீடு கட்டி குடியிருந்து வருகின்றனர். சொத்து தற்போது காலியிடமாக இல்லை. அனைத்து பிளாட்டுகளிலும் வீடுகள் கட்டப்பட்டுள்ளது. நீதிமன்றம் மூலம் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்து பார்வையிடும் பட்சத்தில் சர்வே எண்.574/2ல் கட்டுப்பட்ட 86 செண்ட் நிலம் முழுவதும் பிளாட்டுகளாகப் பிரிக்கப்பட்டுள்ள விவரமும், அச்சொத்துக்களில் வீடுகள் கட்டப்பட்டுள்ள விவரமும் சமூகம் நீதிமன்றத்திற்கு தெரியவரும். எனவே வாதிகள் சொத்தின் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்ற விவரமும், எனவே பிரிவு 37 (2) ன் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாகக் கூறி வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ள விவரமும் நீதிமன்றத்திற்கு தெரியவரும். வாதிகள் சொத்தின் சுவாதீனத்தில் இல்லாததால் நீதிமன்றக்கட்டணம் நீதிமன்றக் கட்டணச் சட்டம் பிரிவு 37(1)ன் கீழ் செலுத்தியிருக்க வேண்டும்.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:15:02 +0530

வாதிகள் கூட்டு சுவாதீனத்தில் இருப்பதாகச் சொல்லி குறைவான நீதிமன்றக் கட்டணம் செலுத்தியிருப்பதால் வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

(ஊ) வாதிகளின் முன்னோர்கள் சர்வே எண்.574/2 ல் கட்டுப்பட்ட 86 செண்ட் நிலத்தில் 30 செண்ட் நிலத்தைக் கிரையம் பெற்றதாகச் சொல்லும் 25.01.1950 ம் தேதிக்கு முன்னரே சர்வே எண்.574/2 ல் கட்டுப்பட்ட 30 செண்ட் நிலம் கொண்டல்சாமி நாயுடு மற்றும் அவரது மனைவி காவேரி அம்மாள் ஆகியோருக்கு 30.07.1934 ம் தேதிய பதிவு கிரைய ஆவண எண்.2436/1934 மற்றும் 21.02.1933 ம் தேதிய பதிவு கிரைய ஆவண எண். 516/1933 ஆகிய கிரைய ஆவணங்கள் மூலம் பாத்தியப்பட்டதால் அச்சொத்தில் கொண்டல்சாமி நாயுடு மற்றும் அவரது மனைவி காவேரி அம்மாளைத் தவிர வேறு யாருக்கும் எந்த உரிமையும் இல்லை. எனவே வாதிகளோ அல்லது அவர்களது முன்னோர்களோ சர்வே எண்.574/2 ல் கட்டுப்பட்ட 30 செண்ட் நிலத்தில் யாதொரு உரிமையும் கோர இயலாது.

(எ) வாதிகள் குறிப்பிட்டிருப்பது போல இராமசாமி நாயுடுவும், பெருமாள் மாதாரியும் சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வந்தனர்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:15:11 +0530

என்பதற்கோ, அல்லது இராமசாமி நாயுடுவும். கந்தசாமி நாயுடுவும் சொத்தை கூட்டாக அனுபவம் செய்து வந்தனர் என்பதற்கோ, வாதிகள் தரப்பில் பட்டா, மற்றும் வருவாய்த்துறை ஆவணங்களும், கூட்டு அனுபவத்தைக் காட்டுவதற்கு வாதிகளின் தரப்பில் யாதொரு ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை.

(ஏ) இந்த வழக்கானது வாதிகள் மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டு சதி செய்து கொண்டு சொத்தைக் கிரையம் பெற்ற பல்வேறு நபர்களிடம் இருந்து பணம் பறிக்க வேண்டுமென்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு. வாதிகளும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் இந்த பிரதிவாதியிடம் நேரில் வந்து சொத்தில் வாதிகளுக்கு பங்கு உள்ளது என்றும் அவர்கள் சம்மதம் இல்லாமல் சொத்தை எழுதிக்கொடுத்து விட்டதால் வாதிகள் பணம் எதிர்பார்ப்பதாகவும், எனவே பணத்தை கொடுத்தால், வாதிகள் யாதொரு நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார்கள் என்றும் சொன்னதற்கு இந்தப் பிரதிவாதி பணம் கொடுக்க மறுத்து விட்டார். எனவே வாதிகள் நீதிமன்றத்தில் இந்த வழக்கை கெட்ட எண்ணத்துடன் தாக்கல் செய்துள்ளனர்.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:15:21 +0530

(ஐ) வாதிகள் திண்டுக்கல் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்து பவர் மற்றும் கிரைய ஆவணங்களை இரத்து செய்து கொடுக்கும்படி கேட்டதாகவும், அந்த மனுவின் பேரில் விசாரணை நடைபெற்று வருகின்றது என்றும் சொல்லியிருப்பது சுத்தப்பொய். சர்வே எண். 574/2 ல் கட்டுப்பட்ட 30 செண்ட் நிலத்தைப் பொறுத்து வாதிகளுக்கோ, அவரது தகப்பனார் இராமசாமி நாயுடுவுக்கோ அல்லது அவரது முன்னோர்களுக்கோ எச்சமயத்திலும் பாத்தியமும் இருந்ததில்லை.

(ஒ) இந்தப் பிரதிவாதி தன் மகன் சார்லஸ் லியோ செல்வராஜ்க்கு தான் கிரையம் பெற்ற பிளாட் எண்.4 ல் கட்டுப்பட்ட 2486.1/4 சதுரடி இடத்தை பதிவு செட்டில்மெண்ட் ஆவணம் மூலம் தானமாகக் கொடுத்து விட்டார். தானப்பத்திரத்தின் அடிப்படையில் இந்தப் பிரதிவாதியின் மகன் அச்சொத்தில் கட்டிடம் கட்டி தன் பெயரில் வீட்டு வரி மற்றும் மின்சாரக்கட்டண இரசீதுகள் செலுத்தி சொத்தை அனுபவித்து வருகிறார். மேலும் அவர் சொத்தினை அடைமானமாகக் காட்டி பேங்க் ஆப் இந்தியா, திண்டுக்கல் கிளையில் 07.02.2014 ம் தேதி உரிமை ஒப்படைப்பு ஆவணப் பத்திரமும் எழுதிப் பதிந்து

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:15:29 +0530

கொடுத்துள்ளார். இந்தப் பிரதிவாதியிடம் இருந்து சொத்தை அவரது மகன் சார்லஸ் லியோ செல்வராஜ் தானமாகப் பெற்றிருப்பதால் அவர் இந்த வழக்கிற்கு அவசியமான கட்சிக்காரர் ஆவார்.

(ஓ) வழக்குச் சொத்தான சர்வே எண்.574/2ல் கட்டுப்பட்ட 30 செண்ட் நிலத்தையும் சேர்த்து பல்வேறு நபர்கள் கிரையம் பெற்றிருப்பதால் அக்கிரையப் பத்திரங்களை இரத்து செய்ய பரிகாரம் கோராமல் அப்பத்திரங்கள் தங்களை கட்டுப்படுத்தாது என சொல்லிவிட்டு வாதிகள் பாகப்பிரிவினை கோரும் வழக்கை மட்டும் தாக்கல் செய்திருப்பது சட்டப்படி செல்லத்தக்கதல்ல. ஆகவே வாதிகளின் வழக்கை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

**6. <u>19 ஆம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

(அ) தாவா வழக்கு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல. திண்டுக்கல் தாலுகா, செட்டிநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ள சர்வே எண் 574/2–ல் அமைந்துள்ள 56 செண்ட் நிலத்தை, பெருமாள் மாதாரி ராமசாமி நாயுடுவிடமிருந்து வாங்கி, தனது அனுபவத்திலும் வைத்திருந்து, அவரது மறைவுக்குப் பிறகு, பெருமாள் மாதாரியின்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:15:37 +0530

சட்டப்பூர்வ வாரிசுகள், சர்வே எண் 574/2–ல் உள்ள 56 சென்ட் நிலத்தை, 21.02.1973 தேதியிட்ட ஆவண எண் 377/1973 விற்பனைப் பத்திரம் மற்றும் 07.05.1980 தேதியிட்ட ஆவண எண் 766/1980 விற்பனைப் பத்திரம் ஆகியவற்றின் மூலம் நாகம நாயுடுவின் மகனான கந்தசாமி நாயுடுவுக்கு விற்றனர். சர்வே எண் 574/2–ல் உள்ள 30 சென்ட் நிலம் கொண்டல்சாமி நாயுடு மற்றும் அவரது மனைவி காவேரி அம்மாளுக்குச் சொந்தமாக இருந்தது.

(ஆ) 30.07.1934 தேதியிட்ட ஆவண எண் 2436/1934 மற்றும் 21.02.1993 தேதியிட்ட ஆவண எண் 516/1933 ஆகியவற்றின் விற்பனைப் பத்திரத்தின்படி, அவர்கள் அனுபவத்தில் வைத்திருந்து அவர்களின் மரணத்திற்குப் பிறகு, சட்டப்பூர்வ வாரிசுகளான திரு. சுப்பா ராயுடு மற்றும் திரு. பெத்து நாயுடு ஆகியோர் அதனை உடைமையிலும் அனுபவத்திலும் கொண்டிருந்து, பெத்து நாயுடுவின் மரணத்திற்குப் பிறகு, அவரது சட்டப்பூர்வ வாரிசுகள் உள்ள நிலையில், சுப்பா நாயுடுவின் உரிமையாளர்கள், அவருடைய மைனர் பிள்ளைகள் மற்றும் திரு. பெத்து நாயுடுவின் சட்டப்பூர்வ வாரிசுகள் சார்பாக, 28.01.1985 தேதியிட்ட ஆவண எண் 8/1985–இல் ஒரு பொது அதிகாரப் பத்திரம் வழங்கியிருந்தனர். அதன்படி சர்வே எண் 574/2–இல் உள்ள மொத்த

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:15:46 +0530

பரப்பளவு 86 செண்ட் ஆகும். சட்டப்பூர்வ உரிமையாளர்களான நாகம நாயுடுவின் மகன் திரு. கந்தசாமி மற்றும் பவர் ஏஜெண்ட் சுப்பா நாயுடு ஆகியோர் ஒன்றிணைந்து, அந்த நிலப்பரப்பை குடியிருப்பு மனைகளாக மாற்றி மேம்படுத்தியதில் இந்த 19–வது பிரதிவாதி, திண்டுக்கல்லில் உள்ள கூட்டு II துணைப் பதிவு அலுவலகத்தில் 11.02.1985 தேதியிட்ட விற்பனைப் பத்திரம் மற்றும் பதிவு எண் 288/1985–இன் படி, மனை எண் 10–இல் உள்ள ஒரு மனையை வாங்கியிருந்தார். அந்தச் சொத்தை வாங்கிய நாளிலிருந்து இன்றுவரை, இந்தப் பிரதிவாதி எந்தவித இடையூறும் இன்றி அமைதியான உடைமையிலும் அனுபவத்திலும் இருந்து வருகிறார். மேலும், அந்த விற்பனைப் பத்திரத்தில் கந்தசாமி நாயுடுவின் மகன்களான திரு. ராஜகோபால் மற்றும் வேல்ராஜ் ஆகியோரிடமிருந்து ஒப்புதல் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. வாதி தரப்பினர் பிரிவு 37 (2)–ன் கீழ் கூட்டு உடைமையைக் கோரி இந்த நீதிமன்றத்தை தவறாக நாடியுள்ளனர்.

(இ) வாதி வகையறா 25.01.1950 தேதியிட்ட சொத்தை வாங்கியதாகக் கூறினர். ஆனால், சர்வே எண் 574/2–ல் உள்ள அந்த 30 செண்ட் நிலமானது, 30.07.1934 தேதியிட்ட ஆவண எண்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:15:54 +0530

2436/1934–இன் படி கொண்டல்சாமி நாயுடு மற்றும் அவரது மனைவி திருமதி காவேரி அம்மாள் ஆகியோருக்குச் சொந்தமாக இருந்தது. மேலும், அவர்களால் அதன் மீது எந்த வில்லங்கமும் ஏற்படுத்தப்பட–வில்லை. எனவே, வாதியினருக்கோ அல்லது அவர்களது முன்னோர்களுக்கோ அதன் மீது எந்த உரிமையும் இல்லை.

(ஈ) கூட்டு உடைமையை நிரூபிப்பதற்காக பட்டா அல்லது பிற வருவாய் பதிவேடுகள் போன்ற எந்தவொரு ஆதாரப்பூர்வமான மற்றும் ஆவணச் சான்றுகளும் இந்நீதிமன்றத்தின் முன் தாக்கல் செய்யப்படவில்லை.

(உ) வாதி தனது பங்குகளை பிரதிவாதிகளிடமிருந்து பிரித்துக் கொள்ளக் கோரியதில் அவர்கள் அதை நீட்டிக்க முயன்றதால், திண்டுக்கல் கண்காணிப்பாளரிடம் ஒரு புகார் பதிவு செய்யப்பட்டது என்பது முற்றிலும் பொய்யானதும் ஆதாரமற்றதுமாகும்.

(ஊ) சர்வே எண் 574/2–இல் உள்ள மொத்த 86 சென்ட் நிலத்தில், 56 சென்ட்டை பெருமாள் மாதாரிக்கு விற்றதாகவும், மீதமுள்ளவை அவர்களது தந்தை ராமசாமிக்குச் சொந்தமானது என்றும் அவர்கள் கோருவதை, சம்பந்தப்பட்ட அதிகாரியிடமிருந்து பெறப்பட்ட

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:16:03 +0530

வருவாய் பதிவேடுகளுடன் முறையான பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் மூலம் அவர்களால் நிரூபிக்கப்பட வேண்டும். மொத்த நிலமும் ஏற்கனவே குடியிருப்பு மனைகளாக மேம்படுத்தப்பட்டு–விட்டதால், மனுதாரர்களுக்குப் பாகப்பிரிவினை கோருவதற்கு எந்த வாய்ப்பும் உரிமையும் இல்லை. எந்தவொரு அடிப்படைக் காரணமும் இன்றி, நில உரிமையாளர்களிடமிருந்து சட்டவிரோதப் பணத்தைப் பெறும் நோக்கத்திற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(எ) பல்வேறு நபர்கள் அந்த நிலத்தை வாங்கியுள்ளதால், உரிமைப் பத்திரத்தை ரத்து செய்ய நிவாரணம் கோராமல், வாதி தரப்பினர் பாகப்பிரிவினைக்காக மட்டுமே ஒரு வழக்கைத் தாக்கல் செய்துள்ள கோரிக்கை நியாயமானதும் உண்மையானதும் அல்ல. இந்த வழக்கு இந்த பிரதிவாதியின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றும் பிரதிவாதி வாதிடுகிறார்.

7. **வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை ஆகியவற்றை பரிசீலித்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.**

1) தாவாச் சொத்துக்களில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 30 செண்ட் நிலத்தை நடமிடர் பார்த்து பிரித்து பிரதிவாதிகளிடமிருந்து வா–திகளுக்கு தனித்த சுவாதீனம் கிடைக்கத்தக்கதா ?

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:16:12 +0530

2) 7 முதல் 19 பிரதிவாதிகள் தாவா சொத்தை நல்லெண்ணத்தின் பேரில் கிரையம் வாங்கினார்கள் என்பது சரியா ?

3) 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு எதிராக இவ்வழக்கில் வழக்குமூ–லம் இல்லை என்பது சரியா ?

4) வாதிகளுக்கு வேறு என்ன பரிகாரம் கிடைக்கத்தக்கது ?

**22.07.2026 அன்று வனையப்பட்ட கூடுதல் எழுவினாக்கள்–**

1) இவ்வழக்கு காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளதா ?

2) தாவா சொத்தில் வாதிகள் கூட்டு சுவாதீனத்தில் உள்ளார்கள் என்பது சரியா ?

3) சரியான நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதா ?

4) தாவா அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்திற்கு உட்பட்டுள்–ளதா?

5) 8 முதல் 19 வரையான பிரதிவாதிகளுக்கு எதிரிடை பாத்திய உரிமை ஏற்பட்டுள்ளதா ?

8. வாதிகள் தரப்பில் 1ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ 23 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில், பி.வா.சா1 முதல் பி.வா.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, பி.வா.சா.ஆ 1 முதல் பி.வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:16:21 +0530

9. **எழுவினா எண்கள் 1,2 மற்றும் கூடுதல் எழுவினாக்கள் 1 முதல் 5—க்கான தீர்வு :**

தாவா சொத்துக்களும் பிற சொத்துக்களும் ஆதியில் கந்தசாமி நாயுடு அனுபவம் செய்து வந்து அவர் இறப்பிற்கு பின்னர் அவரது வாரிசுகள் 25.01.1950 தேதி நாகம நாயுடு என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்து சுவாதீனம் ஒப்படைத்து விட்டார்கள் என்றும், நாகம நாயுடு மேற்படி சொத்தை அனுபவம் செய்து வந்து 10.05.1950ம் தேதி தாவா சொத்துக்களை வாதிகளின் தகப்பனாரான ராமசாமி நாயுடுவிற்கு கிரையம் கொடுத்து செய்துகொடுத்து சுவாதீனத்தையும் ஒப்படைத்து விட்டார் என்றும் அதன் பின்னர் 22.05.1950ம் ஆண்டு வா.சா.ஆ.4 ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்ற 86 செண்ட்டில் ஜாயிண்டு 56 செண்ட் நிலத்தையும் மற்ற வெறு சில நிலங்களையும் சேர்த்து பெருமாள் மாதாரி என்பவருக்கு கிரையம் கொடுத்தார் என்பதும், அதில் நான்குமால்கள் குறிப்பிடாமலும், எந்த பகுதியில் சொத்து உள்ளது என்று குறிப்பிடாமலும் கிரையம் செய்ததால் அவர்கள் இருவரும் கூட்டு உரிமையாளர்கள் என்ற முறையில் கூட்டாகவே வைத்து சொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்பதும், மீதம் உள்ள 30 செண்ட் கிரைய சொத்தை பெருமாள் நாயுடுவுடன் அனுபவம் செய்து

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:16:29 +0530

வந்தார்கள் என்பதும் பெருமாள் மாதாரி, வாதிகளின் தந்தை ராமசமி நாயுடுவுடன் கூட்டு உரிமையாளர் என்ற முறையில் அனுபவித்து வந்து அவரது இறப்புக்கு பின்னர் சொத்தை அவரின் வாரிசுகளான அவரது மனைவி மற்றும் மக்கள் வெவ்வேறு தேதிகளில் தனித்தனி ஆவணங்கள் மூலம் நாகமநாயுடு மகன் கந்தசாமி நாயுடு என்பவருக்கு கிரையம் செய்துள்ளனர் என்றும் அதன் பின்னர் வாதியின் தகப்பனாரும் கந்தசாமி நாயுடுவும் கூட்டு உரிமையாளர்கள் என்ற முறையில் தாவாசொத்தை அனுபவம் செய்து வந்தார்கள் என்றும் இத்தகைய நிலையில், வாதிகளின் தகப்பனார் ராமசாமிநாயுடு 02.02.2000 ம் வருடம் வாதிகளையும் வாதிகளின் தாயார் வீரம்மாள் என்பவரையும் வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும் அதன் பின்னர், வாதிகளின் தாயார் வீரம்மாளும் இறந்துவிட்டார் என்றும், கந்தசாமி நாயுடு இறந்தபிறகு அவரது வாரிசுகளான 1 முதல் 3 பிரதிவாதிகளும் வாதிகளும் கூட்டு உரிமையாளர்கள் மற்றும் பங்குதாரர்கள் என்ற முறையில் அனுபவித்து வந்தார்கள் என்றும் பின்னிட்டு தங்களது தகப்பனார் மூலம் பாத்தியப்பட்ட ஜாயிண்ட் 30 செண்ட் நிலத்தை 1 முதல் 3 பிரதிவாதிகளிடம் பாகம் பிரித்து கொடுக்க வாதிகள் கேட்டு வந்ததில் அவர்கள் காலம் கடத்திவந்ததால் இதுசம்பந்தமாக

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:16:38 +0530

காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டடதென்றும் அதன்பின்னர் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்பது வாதிகள் தரப்பு வழக்காக உள்ளது.

10. வாதிகள் குறிப்பிடுவதுபோல் தாவா சொத்தான 30 செண்ட் நிலம் எதுவும் பூமியில் இல்லை என்றும் தாவா சர்வே எண் 574/2 ல் கட்டுப்பட்ட நிலத்தில் ஒரு பகுதியோ மொத்த பகுதியோ 1 முதல் 3 பிரதிவாதிகள் அனுபவத்தில் இல்லை என்றும் மேற்படி நிலம் 1984 லேயே அங்கீகரிக்கப்பட்ட வீட்டடி நிலங்களாக பிரிக்கப்பட்டு பல்வேறு நபர்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்டு அவர்கள் வீட்டடி மனைகளாக கிரையம் பெற்று அதில் வீடுகள் கட்டி சட்டகாலத்திற்கும் மேலாக வாதிகள் மற்றும் அவர்களுடைய தகப்பனாருக்கு தெரிந்தே அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதும், வாதிகள் தரப்பில் கூறுவதுபோல் தாவாசொத்து எந்த காலத்திலும் கூட்டு அனுபவத்தில் இல்லை என்பதும் தாவா சர்வே எண்ணில் 30 செண்ட் நிலம் ஆதியில் கொண்டல்சாமி நாயுடு மற்றும் அவரது மனைவி காவேரி அம்மாள் ஆகியோருக்கும் 30.07.1934 ல் பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவம் செய்து வந்து அவர்கள் இறப்பிற்கு பிறகு அவர்களுடைய வாரிசுகளும்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:16:47 +0530

பெத்து நாயுடுவின் வாரிசுகளும் கூட்டு அனுபவம் செய்து வந்து, பெத்து நாயுடுவின் வாரிசுகள் அனைவரும் 29.01.1985ம் தேதி சுப்பாநாயுவுக்கு எழுதிக்கொடுத்த பதிவு பொது அதிகார ஆவணத்தின் மூலம் 30 செண்ட் நிலத்தை சுப்பாநாயுடு அனுபவம் செய்து வந்து அதன் பிறகு நாகமநாயுடு மகன் கந்தசாமி என்பவரும் சுப்பாநாயுடுவும் மேற்படி சர்வே எண் 574/2ல் கட்டுப்பட்ட 86 செண்ட் நிலம் முழுவதையும் இருவரும் மனையடிகளாக பிரித்து கிரையம் செய்துள்ளார்கள் என்றும், வாதிகள் கூறுவதுபோல் தாவாசொத்து வாதிகளின் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றும் சட்டகாலத்திற்கு மேலாகவே பலநபர்கள் வீட்டடி மனைகளில் வீடுகள் கட்டி தனித்தனியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்பதும் பிரதிவாதிகள் தரப்பு வழக்காக உள்ளது.

11. 1ம் வாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவர் தன்னுடைய சாட்சியத்திலும் நிரூபண வாக்குமூலத்திலும், தாவா புல எண்ணாக மொத்தம் 86 செண்ட்டில் கூட்டாக 56 செண்டை கிரையம் கொடுத்தது போக மீதி 30 செண்ட் நிலம் இருந்தது என்பதும் இந்த வழக்கு தாக்கல் செய்யும்வரை வாதிகளாலும் 1 முதல் 3 பிரதிவாதிகளாலும் கூட்டாக அனுபவம் செய்யப்பட்டது என்பதும் 1 முதல்

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:16:57 +0530

3 பிரதிவாதிகளிடம் வாதிகளுக்குரிய ஜாயிண்ட் 30 செண்ட் நிலத்தில் பாகம் கோரியதற்கு அவர்கள் காலம் கடத்தி வந்ததால் இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்.

12. வாதிகள் குறிப்பிடுவதுபோல் தாவாசொத்தான 30 செண்ட் நிலம் தொடர்ந்து வாதிகள் மற்றும் அவர்களுடைய முன்னோர்கள் காலத்தில் இருந்து கூட்டு அனுபவம் செய்யப்பட்டு வந்தது என்பதற்கு நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் எவ்வித குறிப்பான மற்றும் தெளிவான சாட்சியம் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. மேற்படி சொத்துக்கு வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் அவ்வாறு ஏற்படுத்தப்படவில்லை என்பதும் வாதிகள் தரப்பில் ஒப்புக்கொள்ளப்–பட்டுள்ளது.

13. பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி சங்கதிகள் குறிப்பாகவும் கடுமையாகவும் மறுக்கப்பட்டுள்ளது. தாவா சொத்தின் அளவு, இயற்கை அமைப்புகள் மற்றும் அனுபவம் ஆகியவை குறித்தும் வாதிகள் வழக்கு தாக்கல் செய்வதற்கு 35 ஆண்டுகளுக்கு முன்பே வீட்டடி மனைகளாக பிரிக்கப்பட்டு அதில் வீடுகள் கட்டி பல நபர்கள் அனுபவித்து

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:17:06 +0530

வருகிறார்கள் என்பதை வா.சா.1 தன்னுடைய குறுக்கு விசாரணையில் கீழ்கண்டவாறு ஒப்புக்கொண்டுள்ளார்.

*" .....என் தகப்பனார் ராமசாமி நாயுடு பெருமாள் மாதாரி என்பவருக்கு வா.சா.ஆ.4 ன்படி 56 செண்ட் நிலத்தை கிரைய;k செய்து கொடுத்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ல் 86 செண்ட்டில் 56 செண்டை கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லவில்லை என்றாலும் ஜாயிண்ட் 56 செண்டை கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்......*

*......கந்தசாமி கிரையம் பெற்ற 56 செண்ட் நிலம், சுப்பா நாயுடு வசம் இருந்த 30 செண்ட் ஆகிய இரண்டு நிலங்களையும் ஒன்றாக சேர்ந்து 27.12.1984 ம் தேதி திண்டுக்கல் பஞ்சாயத்து கமிசனர் அவர்களிடம் அனுமதி பெற்று இ.பி காலனி என பெயரிட்டு சொத்துக்களை பிளாட்டுளாக பிரித்து கிரையம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். 86 செண்டில் உள்ள அனைத்து பிளாட்டுகளையும் விற்பனை செய்துவிட்டார்கள் எனறால் சரிதான். அனைத்து பிளாட்டிலும் வீடு வந்துவிட்டது எனறால் சாரிதான். 1985 ல் இருந்து கிரையம் செய்துவரும் நிலையில் 2019 ம் வருடம் இவ்வழக்கை காலதாமதமாக தாக்கல் செய்ததற்கு என்ன காரணம் என்றால் ஆவணங்கள் கிடைப்பதற்கு காலதாமதமானது. 18 ம் பிரதிவாதி 13.02.1985 ம்தேதி பிளாட் எண் 4 ஐ கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.......*

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:17:15 +0530

*......நான் தற்போது சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றல் சரிதான். கூட்டு சுவாதீனம் என்ற அடிப்படையில் நீதிமன்றக்கட்டணம் கட்டியுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் பெருமாள் மாதாரி கிரையம் பெற்ற 56 செண்டையும் என் தகப்பனார் வசம் இருந்த 30 செண்ட நிலத்தையும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்ட வருவாய்த்துறை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பெருமாள் மாதாரியிடமிருந்து சொத்தை கிரையம் பெற்ற கந்தசாமி நாயுடுவும் என் தகப்பனாரும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்ட வருவாய்த்துறை ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்........*

*......வா.சா.ஆ.4 ல் 86 செண்ட்டில் 56 செண்டை கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லவில்லை என்றாலும் ஜாயிண்ட் 56 செண்டை கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.......*

*.......30.07.1934 கிரயப்பத்திரப்படி அவர்களுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், அவர்கள் இறந்தபிறகு அந்த சொத்துக்களை அவரது மகன்களான பெத்து நாயுடு மற்றும் சுப்பா நாயுடு ஆகியோர்கள் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரியல்ல. பெத்து நாயுடு இறந்த பின்னர் அவரது வாரிசுகள் 29.01.1985ம் தேதி தங்களுக்கு பாத்தியப்பட்ட பாதி சொத்துக்களைப் பொறுத்து சுப்பா நாயுடுக்கு பொது அதிகாரம் வழங்கியுள்ளார்கள் என்றால் சரிதான். கந்தசாமி கிரையம்*

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:17:23 +0530

*பெற்ற 56 செண்ட் நிலம், சுப்பாநாயுடு வசம் இருந்த 30 செண்ட் ஆகிய இரண்டு நிலங்களையும் ஒன்றாக சேர்த்து 27.12.1984ம் தேதி திண்டுக்கல் பஞ்சாயத்து கமிசனர் அவர்களிடடம் அனுமதி பெற்று இ.பி. காலனி என பெயரிட்டு சொத்துக்களை பிளாட்டுகளாக பிரித்து கிரையம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். "*

1ம் வாதி குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை கவனமாக பரிசீலனை செய்து பார்க்கும்போது, வாதிகள் பிராதில் சொத்து விபரத்தில் கூறியுள்ள 30 செண்ட் நிலம் அமைப்பில் புஞ்சை நிலமாக இல்லை என்பதும் அது 1984–1985ம் ஆண்டு வாக்கிலேயே கந்தசாமி மற்றும் சுப்பாநாயுடு என்பவர்களால் வீட்டடி மனைகளாக பிரிக்கப்பட்டு, பல்வேறு நபர்களுக்கு கிரையம் கொடுக்கப்பட்டு, அதில் வாதிகள் மற்றும் வாதிகளின் தகப்பனாருக்கு தெரிந்தே சட்டகாலத்திற்கும் மேலாக தொடர்ந்து எவ்வித ஆட்சேபணையும் இன்றி அனுபவம் செய்து வந்துள்ளார்கள் என்பதும் தெளிவாக அறியமுடிகிறது. பிரதிவாதிகள் தரப்பில் 1985ம் ஆண்டுமுதல் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களும் மற்றும் வாய்மொழி சாட்சியங்களும் அதை உறுதிபடுத்துவதாகவே உள்ளது.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:17:37 +0530

14. 1984–1985ம் ஆண்டு வாக்கில் வீட்டடி மனைகளாக பிரிக்கப்பட்டு தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு பல்வேறு நபர்கள் அந்த நிலத்தில் வீடுகள் கட்டியபோது அதைத் தடுத்து அந்த காலக்கட்டத்தில் வாதிகளோ அப்போது உயிருடன் இருந்த அவருடைய தகப்பனாரோ எவ்விதமான ஆட்சேபணையும் செய்ததாக வாதிகள் தரப்பில் எவ்விதமான சாட்சியமும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. அதனடிப்படையில் பார்க்கும்போது, தாவா சொத்தை வீட்டடி மனைகளாக பிரித்து வீடுகள் கட்டி அனுபவத்தில் உள்ள மற்ற பிரதிவாதிகளுக்கு எதிரிடை அனுபவம் சித்தித்துள்ளது என்ற எதிர் வாதமானது ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவே உள்ளது.

15. இத்தகைய சூழ்நிலையில், தாவா சொத்து புஞ்சை நிலமாக கூட்டு அனுபவத்தில் உள்ளது என்று வாதிகள் கோரியுள்ள பாகப்பிரிவினை பரிகாரம் எந்த கோணத்தில் பார்த்தாலும் ஏற்கத்தக்கதாக இல்லை. 1ம் வாதி குறுக்கு விசாரணையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை பார்க்கும்போது, வாதிகள் உண்மையான விவரங்களை கூறி சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அனுகவில்லை என்றும், பிராது அது

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:17:46 +0530

வனையப்பட்டுள்ள விதத்தில் நிலைக்கத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. மேலே பரிசீலிக்கப்பட்ட அனைத்து சங்கதிகளையும் கவனத்தில்கொண்டு பார்க்கும்போது, தாவா சொத்து வாதிகளின் கூட்டு அனுபவத்தில் இல்லை என்பதாகவும் 8 முதல் 19 வரையான பிரதிவாதிகள் தாவா சொத்தை நல்லேண்ணத்தின்பேரில் கிரையம் வாங்கியுள்ளார்கள் என்பதாகவும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. இந்நிலையில், தாவா சொத்துக்களைப் பொறுத்து வாதிகள் கோரும் பாகப்பிரிவினை பரிகாரமும், தனித்த சுவாதீனமும் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று எழுவினாக்கள் 1, 2 மற்றும் கூடுதல் எழுவினாக்கள் 1 முதல் 5 ஆகியவற்றிற்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

17. <u>எழுவினா எண்.3 க்கான தீர்வு :</u>

முந்தைய எழுவினாக்களில் வாதிகள் கோரும் பாகப்பிரிவினைப் பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என தீர்வு கண்டுள்ள–நிலையில், இந்த எழுவினாவிற்க்கு விரிவாக தீர்வு காணப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:17:56 +0530

18. **<u>எழுவினா எண்.4 க்கான தீர்வு :</u>**

இந்நீதிமன்றம் மேற்கண்ட எழுவினாக்களுக்கு தீர்வு கண்டுள்ளதன் அடிப்படையில், வாதிகளுக்கு இவ்வழக்கில் வேறு எந்த பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல என இந்த எழுவினாவிற்கு தீர்வு காண்கிறது.

**இறுதியாக**, இவ்வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரையானது என்னால் நிலை–1 சுருக்கெழுத்தருக்கு சொல்லப்–பட்டு, அவரால் ஒலி வடிவில் குறிப்பு எடுக்கப்பட்டு பின்னர் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 18 ஆம் நாள் ஆகிய இன்று அவையறிய பகரப்பட்டது.

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:18:04 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**திண்டுக்கல்.**

இணைப்பு –

**வாதிகள் தரப்பு சாட்சி** :–

வா.சா.1 திரு. ஜனார்த்தனன் (1ம் வாதி)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 25.01.1950 | நாகமநாயுடு பெயரில் உள்ள கிரைய ஆவணம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.2 | 10.05.1950 | ராமசாமி நாயுடு பெயரில் உள்ள கிரைய ஆவணம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.3 | 10.05.1950 | ராமசாமி நாயுடு பெயரில் உள்ள கிரைய ஆவணம் (சான்றிட்ட நகல்) |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.4 | 22.05.1950 | ராமசாமி நாயுடு பெயரில் உள்ள கிரைய ஆவணம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.5 | 29.01.1985 | சுப்பையாநாயுடு பெயரில் உள்ள பவர் பத்திரம் நகல் |
| வா.சா.ஆ.6 | 28.01.1985 | கந்தசாமிநாயுடு பெயரில் உள்ள பவர் பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.7 | 08.02.1985 | 8ம் பிரதிவாதி பத்மினி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.8 | 11.02.1985 | 9ம் பிரதிவாதி ஆல்பர்ட் கிறிஸ்துதாஸ் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.9 | 11.02.1985 | 10ம் பிரதிவாதி சீனிவாசன் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.10 | 11.02.1985 | 11ம் பிரதிவாதி காளிமுத்து பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.11 | 11.02.1985 | 12ம் பிரதிவாதி வெள்ளைச்சமி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.12 | 11.02.1985 | 13ம் பிரதிவாதி லட்சுமி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.13 | 11.02.1985 | 14ம் பிரதிவாதி முத்துலட்சுமி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.14 | 11.02.1985 | 15ம் பிரதிவாதி பெரியசாமி பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.15 | 11.02.1985 | 16ம் பிரதிவாதி ராமகிருஷ்ணன் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.16 | 11.02.1985 | 17ம் பிரதிவாதி அன்னகாமு பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.17 | 11.02.1985 | 18ம் பிரதிவாதி செல்வராஜ் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |
| வா.சா.ஆ.18 | 11.02.1985 | 19ம் பிரதிவாதி முருகேசன் பெயரில் உள்ள கிரையப்பத்திரம் (சான்றிட்ட நகல்) |

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:18:18 +0530

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.19 | -- | 01.01.1950 முதல் 03.05.2019 வரையான வில்லங்க சான்று (அசல்) |
| வா.சா.ஆ.20 | 02.05.2018 | மாவட்ட பதிவாளர் (நிர்வாகம்), திண்டுக்கல் அவர்களின் அறிவிப்பு (அசல்) |
| வா.சா.ஆ.21 | 11.03.2019 | பொது தகவல் அலுவலரின் அறிக்கை (நகல்) |
| வா.சா.ஆ.22 | 28.07.2000 | ராமசாமி நாயுடுவின் வாரிசு சான்று (நகல்) |
| வா.சா.ஆ.23 | 14.08.2009 | வீரம்மாளின் இறப்பு சான்று (நகல்) |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி:-**

பி.வா.சா.1 ராஜகோபால்

பி.வா.சா.2 செல்வராஜ்

பி.வா.சா.3 கே.முருகேசன்

**பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 21.02.1973 | கந்தசாமி நாயுடு அவர்களுக்கு நாகன் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 07.05.1980 | கந்தசாமி நாயுடு அவர்களுக்கு சின்னநாகன் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 15.06.2006 | சார்லஸ் லியோ செல்வராஜ் அவர்களுக்கு 18 ம் பிரதிவாதியான A. செல்வராஜ் எழுதிக்கொடுத்த தானா செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.4 | 10.05.2022 | 01.01.1987 ம் தேதி முதல் 09.05.2022 ம் தேதி வரைக்கும் உண்டான வில்லங்கச் சான்றிதழின் இணையதள நகல் |

PADMANABAN VENKATASAMY
Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:18:27 +0530

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.5 | 11.02.1985 | 19ம் பிரதிவாதிக்கு கே.முருகேசனுக்கு, என். கந்தசாமி வகையறா எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.6 | 30.04.1985 | 19ம் பிரதிவாதிக்கு என். கந்தசாமி மக்கள் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |

PADMANABAN VENKATASAMY

Digitally signed by PADMANABAN VENKATASAMY
Date: 2026.08.18 17:18:35 +0530

முதன்மை **மாவட்ட நீதிபதி,**
திண்டுக்கல்